## கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி.

## M.C.O.P.No.172/2022

2025 ஆம் வருடம் ஜனவரி மாதம் 27 ஆம் நாள் என்பவரின் சாட்சிய வாக்குமூலம் 1873 ஆம் வருடத்தின் 10-வது விதிமுறைகளின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : திரு.முனியாண்டி (ம.சா.1) | தொழில் | : விபூதி கம்பெனி |
| த/பெ.<br>க/பெ. | திரு. முனியாண்டி<br>திரு. | வயது | : 59 |
| கிராமம் | : பெரியப்பா நகர், பழனி டவுன் | இனம் | : ஆண் |
| தாலுகா | : பழனி | நாள் | : 27.01.2025 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | | |

நான் இந்த மனுவில் மனுதாரர். என்னுடைய சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். இதில் உள்ள கையெழுத்துக்கள் என்னுடையவை தான். என்னுடைய தகவலின் அடிப்படையில் தான் அது தயார் செய்யப்பட்டது.

| | |
|---|---|
| ம.சா.ஆ.1 – | முதல் தகவல் அறிக்கை (இணைய நகல்) |
| ம.சா.ஆ.2 – | 1-ம் எதிர்மனுதாரர் வாகன பதிவு சான்று நகல் (2ம் எதிர்மனுதாரர் தரப்பில் மேற்படி வாகனத்தின் தகுதிச் சான்றிதழ் 18.06.2020-உடன் முடிவடைந்துவிட்டது என்றும், பதிவு சான்றின் முதல் பக்கம் மட்டும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் தெரிவித்து ஆட்சேபணை செய்யப்பட்டது) |
| ம.சா.ஆ.3 – | 1-ம் எதிர்மனுதாரர் வாகன காப்பீட்டுச்சான்று நகல். |
| ம.சா.ஆ.4 – | எதிர்மனுதாரர் வாகன ஓட்டுனர் உரிமம் நகல். |
| ம.சா.ஆ.5 – | 1-ம் எதிர்மனுதாரர் மோட்டார் வாகன ஆய்வறிக்கை (இணைய நகல்) |
| ம.சா.ஆ.6 – | விபத்துப் பதிவேடு (இணைய நகல்) |
| ம.சா.ஆ.7 – | காயச்சான்று (இணைய நகல்) |
| ம.சா.ஆ.8 – | நுண்கதிர் படங்கள் (அசல்) (3 எண்ணிக்கை) |

ம.சா.ஆ.9 – ஸ்கேன் ரிப்போர்ட் (அசல்)

ம.சா.ஆ.10 – டிஸ்சார்ஜ் சம்மரி அசல்.

ம.சா.ஆ.11 – மருந்து மற்றும் மருத்துவமனை பில்கள் அதற்குண்டான இணைப்பு ரூ.10,62,692/– அசல் (51 எண்ணிக்கை)

ம.சா.ஆ.12 – முனியாண்டி அமர்ந்து சென்ற வாகனத்தின் வாகன பதிவு சான்று (இணைய நகல்)

ம.சா.ஆ.13 – முனியாண்டி அமர்ந்து சென்ற வாகன காப்பீட்டுச்சான்று நகல்.

ம.சா.ஆ.14 – முனியாண்டி அமர்ந்து சென்ற வாகனத்தின் ஓட்டுனர் உரிமம் இணைய நகல்.

ம.சா.ஆ.15 – முனியாண்டி அமர்ந்து சென்ற வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை (இணைய நகல்)

ம.சா.ஆ.16 – மாதிரி வரைபடம் (இணைய நகல்)

ம.சா.ஆ.17 – குற்ற இறுதி அறிக்கை (இணைய நகல்)

ம.சா.ஆ.18 – ஆதார் அட்டை நகல் (அசலுடன் ஒப்பீடு செய்து பார்க்கப்பட்டது)

ம.சா.ஆ.19 – பான் கார்டு நகல் (அசலுடன் ஒப்பீடு செய்து பார்க்கப்பட்டது)

நீ.ம.சா.ஆ.1 – ஊனச்சான்றிதழ்

மனுப்படி உத்தரவாக கேட்டுக்கொள்கிறேன்.

**<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை :–</u>**

நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் பற்றி எனக்கு முழுமையாக தெரியும். எனக்கு ஓட்டுனர் உரிமம் உள்ளது என்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. நானும் என் மகன் முனிராஜும் இருசக்கர வாகனத்தில் பயணம் செய்தோம். நான் தாக்கல் செய்துள்ள முதல் தகவல் அறிக்கை, புகார் மற்றும் குற்ற அறிக்கை ஆகிய ஆவணங்களில் நானும் என் மகனும் தலைக்கவசம் அணிந்து சென்றதாகவோ, அது உடைந்து விழுந்துவிட்டதாகவோ குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள மருத்துவ ஆவணங்களில் எனக்கு தலை மற்றும் மூளை பகுதிகளில் பாதிப்பு ஏற்பட்டதாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். தாடையில் எலும்பு முறிவு ஏற்பட்டதாகவும், நெஞ்சுப் பகுதியில் ரிப்

பிராக்சர் ஏற்பட்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நிரூபண வாக்குமூலத்தில் தலை மற்றும் மூளைப்பகுதியில் ரத்தக்கசிவு மற்றும் ரத்தக்கட்டு ஏற்பட்டுள்ளதாக கூறியுள்ளது தவறு என்றால் சரியல்ல. காதுகளில் ரத்தக்கசிவு ஏற்பட்டுள்ளதாக கூறியுள்ளது தவறு என்றால் சரியல்ல. எனக்கு ரத்த அழுத்தம் மற்றும் சர்க்கரை நோய் இருப்பதாக எனது டிஸ்சார்ஜ் சம்மரியில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனக்கு அறுவைச் சிகிச்சை எதுவும் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல, எனக்கு தொடையில் இருந்து சதை எடுத்து பிளாஸ்டிக் சர்ஜரி சிகிச்சையானது முகம் மற்றும் இடது கையில் செய்யப்பட்டுள்ளது. எனக்கு எலும்பு முறிவுக்காக எவ்வித அறுவைச் சிகிச்சையும் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. எனது டிஸ்சார்ஜ் சம்மரியில் நான் ரத்த சர்க்கரையை கட்டுப்பாட்டில் வைக்கவேண்டும் என பரிந்துரைக்கப்பட்டுள்ளதாக சொன்னால் சரிதான். நான் எடுத்துக்கொண்ட தொடர் சிகிச்சைகள் ரத்தச் சர்க்கரை மற்றும் ரத்த அழுத்தம் தொடர்பானது என்றால் சரியல்ல, நான் பிளாஸ்டிக் சர்ஜரி செய்த மருத்துவரையும், பல் மருத்துவரையும் சந்தித்து சிகிச்சை எடுத்துக்கொண்டேன். என்னுடைய காயச்சான்றிலோ, டிஸ்சார்ஜ் சம்மரியிலோ பல் உடைந்துவிட்டதாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. நான் இழப்பீடு பெறுவதற்காக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான்தான் சாலையை திடீரென கடந்து விபத்தை ஏற்படுத்திக்கொண்டதாக சொன்னால் சரியல்ல. எனது மருத்துவ பில்களில் பெரும்பகுதி ரத்த அழுத்தம் மற்றும் ரத்தச் சர்க்கரை தொடர்பானது என்பதால் சிகிச்சை அளித்த மருத்துவரை விசாரித்தால்தான் உண்மைத்தன்மை தெரியும் என்றால் சரியல்ல. நான் விபத்துக்கு முன்பு ஆனந்த விலாஸ் விபூதி ஸ்டோர்ஸ் வைத்து தொழில் செய்ததாகச் சொல்வதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் ரூ.3,00,000/- மாத வருமானம் ஈட்டியதாகச் சொல்வதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. இந்த விபத்து இருசக்கர வாகனத்தை ஓட்டியவரின் கவனக்குறைவால் ஏற்பட்டதால் அதன் உரிமையாளரை வழக்கின் முறையான

தரப்பினராக சேர்க்காததால் வழக்கு பிழையுடையது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.5 மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் 18.06.2019 –உடன் தகுதிச்சான்று முடிந்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1–ம் எதிர்மனுதாரரின் ஓட்டுனர் உரிமம் 03.09.2020 உடன் போக்குவரத்து வாகனங்களுக்கு உரிமம் முடிவடைந்துவிட்டது என்றும், விபத்து தேதியில் ஓட்டுனர் உரிமம் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. விபத்தில் சம்பந்தப்பட்ட தோஸ்த் வாகனத்திற்கு தகுதிச்சான்று காலாவதியாகிவிட்டதால் 2–ம் எதிர்மனுதாரர் எவ்வித இழப்பீடும் செலுத்த திருத்தப்பட்ட மோட்டார் வாகன சட்டப்படி கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல.  எனக்கு ஏற்பட்ட காயங்கள் அனைத்தும் ராயல்கேர் மருத்துவமனையிலேயே சரியாகிவிட்டது என்றும், ஊனச்சான்றில் மிகைப்படுத்தப்பட்டு சொல்லப்பட்டுள்ளது என்றும் சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை** :–  இல்லை.

K BHARATHI

Digitally signed by K BHARATHI
Date: 2025.01.27 18:22:20 +0530